**DEPOSITION OF WITNESS**
Chapter XXIII Code of Criminal Procedure.)
- - - - -
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT MADHAVARAM.**

Calendar :
Miscellaneous : **CC. 77/2020**

Preliminary Register :
Sessions :
PW 8
Deposition of witness for :

Name : டாக்டர் முத்துநாராயணன்

Father's Name : Dharmalingam

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :60

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23/02/2023.

**முதல் விசாரணை**

நான் தற்சமயம் பணி ஓய்வு பெற்றுள்ளேன். கடந்த 18.04.2018 அன்று இரவு 09.50 மணியளவில் அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் மருத்துவ அதிகாரியாக பணியாற்றிகொண்டிருந்தபோது சூரிய நாராயணன் ஆண் வயது 40 என்பவரை அவருடைய சகோதரர் இமானுவேல் என்பவர் சிகிச்சைக்காக அழைத்து வந்தார். மேற்படி நபர் சுயநினைவுடன் காணப்பட்டார். அவர் தம் கூற்றின்படி தன்னை அடையாளம் தெரிந்த 5 நபர்கள் கற்களால் 18.04.2018 அன்று இரவு 9 மணியளவில் அவரது வீட்டின் அருகே தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதித்ததில் சுயநினைவுடன் இருந்தார். வெளிகாயங்கள் ஏதும் இல்லை. மார்பில் இரு பகுதியிலும் வலியும் வேதனையும் இருப்பதாக கூறினார். எனவே மேற்படி நபருக்கு விபத்து பதிவேட்டினை பதிவு செய்து மேல் சிகிச்சைக்காக அறுவை சிகிச்சை வார்டில் எண் 407ல் உள்நோயாளியாக சேர பரிந்துரை செய்தேன். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் விபத்து பதிவேடு நான் பதிவு செய்தது தான். அந்த விபத்து பதிவேடு அ.சா.ஆ.2 ஆகும். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்

**எதிரிகள் 1முதல் 4 ஆஜர் இல்லை. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் எதிரிகளுக்காக கு.வி.மு.ச பிரிவு 317ன் கீழ மனுதாக்கல் செய்யப்பட்டு**

அனுமதிக்கப்பட்டது. குறுக்கு விசாரணை செய்ய எதிரிகள் தரப்பிற்கு வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

மறு விசாரணை இல்லை